# தமிழ்ச்சிட்டு

சிறுவர்
கலை இலக்கியத்
திங்களிதழ்

தென்மொழி
இணைப்பு
கடகம் (சூலை - 2000)

குரல் - 23
இசை - 7



## துன்பத்திற்குத் துவளாதே!

துன்பம் வரும்போழ்தில் - நீ
துவண்டு விடவேண்டா!
இன்பம் வரும் பின்னே - என
எண்ணியிரு தம்பி!

சூழ்ச்சி பிறர் செய்வார் - நீ
சோர்ந்து விடல் தீது!
தாழ்ச்சி வரும் முன்னே - நீ
தப்பி விடல் நன்று!

வாய்மைஉளம் கொண்டே - உன்
வாழ்வில் நலம் தேடு!
தூய்மைமனம் கொண்டோர் - ஒரு
தோல்வி பெறல் இல்லை!

செல்வ வளம் எல்லாம் - நிலை
தேய்ந்து விடல் நேரும்!
கல்வி வளம் என்றும் உனைக்
காத்து வரும் தம்பி!

## தொழில்!

எத்தொழில் செய்யினும் மேன்மையென் றெண்ணு!
எவருன்னை வெறுத்தாலும் வருந்தாதே கண்ணு! ( எத் )

புத்தெழில் *ஓவம் கற்றாலும் - கற்
படிமத்தில் உன்மனம் ஈடுபட்டாலும்,
பித்தளை இரும்பினைக் கொண்டு - வேலை
புரிந்திட ஓராவல் உனக்கு வந்தாலும் ( எத்தொழில் )

தச்சர் பணி புரிந்தாலும் - கொல்லர்
தட்டாரைப்போல் தொழில் செய்ய வந்தாலும்,
அச்சுத் தொழிலைக் கற்றாலும் - மற்ற
ஆலைத் தொழில்களை நாளுஞ் செய்தாலும் ( எத்தொழில் )

வாணிகஞ் செய்ய வந்தாலும் - பல
வண்டிகள் ஏறி நீ ஓட்ட வந்தாலும்,
காணி நிலங்கள் உழுது - மாடு
காளைகளோடு நீ வேலை செய்தாலும். ( எத்தொழில் )

கடல்தனைத் தாண்ட வந்தாலும் - வான்
கப்பல் வழியாய்ப் பறக்க வந்தாலும்,
உடல் வருத்தி மலை யேறி - நீ
ஓயாது பணியாற்றும் நிலைக்கு வந்தாலும், ( எத்தொழில் )

உறுதியை உள்ளத்திற் கொள்ளு - அதற்
கொண்ணாத சோம்பலை உடனே நீ தள்ளு!
இறுதிவரை யுழைத்தாலும் - மன
இடர்ப்பாடு நீக்கி உழைத்தலே மேலாம்! ( எத்தொழில் )

---

* ஓவம் - ஓவியம். கற்படிமம் - சிற்பம்.

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு


குரல் : 23, இசை : 7

தென்மொழி
கடகம் 2031(சூலை 2000)
இதழின் இணைப்பு

நிறுவனர்
**பாவலரேறு
பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**



அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தென்மொழி'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை– 601 302.
தொலைபேசி எண் : 239 0231


## அரசியல் தெரிந்து கொள்!

திரைப்படங்களில் வருகிற நடிகர் நடிகைகள் பற்றி மட்டுமல்லாமல் அவற்றின் படைப்பாளிகளைப் பற்றியெல்லாம் நாம் நிரம்பத் தெரிந்து வைத்திருக்கிறோம்.

அவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்? அவர்களுக்கு என்ன பிடிக்கும்? எது பிடிக்காது? அவர்களின் குணம் என்ன - இவையெல்லாம் நாம் விரும்பித் தெரிந்து கொள்வன.

அதே போல் தொலைக்காட்சித் தொடரின் நாயகர்களும் இப்போதெல்லாம் நமக்கு அத்துப்படியாகி விடுகின்றனர்.

ஆனால் அரசியல் என்றால் நம்மில் பலருக்கு ஏதோ இழிவாகவும், வெறுப்பாகவும் இருக்கின்றது.

உண்மையில் அரசு என்பது நம்மை மட்டுமல்ல, நம் குமுகத்தையே ஆட்டிப் படைக்கிற பெருங்கருவி என்பதை நாம் தெரிந்து கொள்வதில்லை.

நாம் என்ன விளையாடலாம், என்ன படிக்கலாம், எப்படிப் பொழுது போக்கலாம் - இவை யாவற்றையும் தீர்மானிப்பது என்பதே அரசுதான்.

எனவே அரசு நம்மை ஒரு சட்டகத்துள் நிறுத்தி வைக்கிறது. நம் வரலாற்றை இன்னது என்று அதுதானே சொல்லுகிறது.

அப்படி நம் குமுக வாழ்க்கையையே தீர்மானிக்கிற அரசமைப்பைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளாததால்தான் நம் உணர்வுகளையெல்லாம் புரிந்து கொள்ளாமல் அரசு அதன் விருப்பப்படி இயங்குகின்றது.

கல்வி அறிவு பெற்று, குமுக அறிவு பெற்று, வாழ்க்கை அறிவுபெற்று வளர்கிறவர்கள் அரசமைப்பைப் பெறுவதில்லை. எனவேதான் இந்த அறிவெல்லாம் இல்லாத நடிகர்கள் மற்றும் பணம் கொழுத்தவர்கள் எல்லாருக்கும்

காவர்சியாக அறிமுகமானவர்கள் என்கிற அளவில் அரசைப் பெற்றுக் கொண்டு தம் விருப்பப்படி ஆட்டிப் படைக்கின்றனர்.

நம் குமுகம் சீரழிகிறது.

நாம் என்ன படிப்பது என நம் விருப்பங்கள் நிறைவேறுவதில்லை. நம் வாழ்க்கைச் சிறப்புடையதாய் நாமும் பெரியவர்களாய் ஆவதில்லை.

எனவே; நமக்கு அரசியல் புரியவேண்டும்.

அரசியல் வளத்தால்தான் ஒரு நாடு வளம் பெறும்.

எனவே குழந்தைகளே . . .

இன்றைய இழிந்த அரசியலைத் தெரிந்து கொண்டு நாம் ஓர் உயர்ந்த அரசியலைப் படைத்திட வேண்டும்! அதுதான் நம்மை - நம் குடும்பத்தை - நம் குமுகத்தை வளப்படுத்தும்.

## தமிழ் மண்ணின் பழமொழிகள்.

¤ அவரை பிற எம்மாதம் போட்டாலும் சுறவ மாதம் காய்க்கும்.
¤ அவரை விதைக்கத் துவரை முளைக்குமா?
¤ நீரில் அமிழ்த்திய சுரைக்குடுக்கை போல்
¤ சுண்டைக்காய் காற்பணம் சுமைக்கூலி முக்காற் பணம்
¤ பொன்னை எறிந்தாலும் பொடிக் கீரையை எறியலாமா?
¤ வாழை வடக்கீனும்; வான் கமுகு தெற்கீனும்.
¤ வாழைக்குத் தான் ஈன்ற காயே கூற்றுவான் போல
¤ வீண் இழவாம் வெங்காயத் தாளாம்.
பிடுங்கப் பிடுங்கப் பேரிழவாம்!
¤ வெட்டிவேரில் விசிறியும் விலாமிச்சை வேரில் தட்டியும் பண்ணு.
¤ சீனிக் கிழங்கு தின்கிற பன்றியைச் செவி அறுத்தாலும் விடாது.

## சொல்லடை விடை

**இடமிருந்து வலம்**

1. பள்ளிப் பறவைகள்
7. அண்ணன்
8. பாவாணர்
11. களிப்பு
12. பூம்புகார்
13. வளி
14. பிட்டு
15. அழகின் சிரிப்பு

**வலமிருந்து இடம்**

10. அம்பு
11. கண்ணகி

**மேலிருந்து கீழ்**

1. பணி
2. பட்டு
3. கசப்பு
4. உண்ணாமை
5. பொன்னி
7. அரத்தி

**கீழிருந்து மேல்**

6. கோவை
7. அணி
9. பிணம்
13. வண்ணம்
15. அந்தி.

# அவை ஏன் மிதக்கின்றன?

சில பொருள்கள் தண்ணீரில் மிதப்பதையும், சில பொருள்கள் நீரில் மூழ்குவதையும் நாம் பார்த்திருக்கிறோம் தானே!

அவை ஏன் அவ்வாறு மிதக்கவும், மூழ்கவும் செய்கின்றன தெரியுமா?



ஒரு பொருள் தண்ணீரில் மூழ்கும் போது அதனால் வெளியேற்றப்படும் நீரின் எடை அந்தப் பொருளின் எடையை விடக் குறைவாக இருந்தால் அது மிதக்கும்.

மாறாக அந்த நீர்மத்தின் எடை மிகுந்திருந்தால் அந்தப் பொருள் மூழ்கிவிடும்.

அதே போல அடர்த்தி அதிகமான நீர்மங்களிலும் பொருள்களின் மிதவை நிலை வேறுபடத்தானே செய்யும்.

இதைக் கண்டறிய ஓர் எலுமிச்சம் பழம், நீர், உப்பு, ஒரு குவளை இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

ஒரு குவளை நீரில் எலுமிச்சம் பழத்தைப் போடுங்கள். அது மூழ்கி அடியில் சென்று விடும். பிறகு, அந்த நீரில் உப்பைச் சேருங்கள். இப்போது அந்தக் கரைசலின் அடர்த்தி அதிகமாக அன்றோ மாறும்.

எலுமிச்சம் பழத்தின் அடர்த்தியைக் காட்டிலும் கரைசலின் அடர்த்தி அதிகமாகிற போது அடியிலிருந்த எலுமிச்சை மேலே வந்து மிதந்துவிடும்.

# வால்மீன்கள்....

கதிரவ மண்டலத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது குழலி மிக ஆர்வத்துடன் கேட்டது நம்பியின் தந்தைக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

‘‘மேலும் விரிவாகச் சொல்லுங்கள் ஐயா மிகவும் ஆர்வமாக இருக்கிறது” என்றாள் குழலி.

‘‘சரி. . . . ’’, என்றவர் தொடர்ந்தார்.

நீங்கள் சில பொழுது வானத்தில் பார்த்திருப்பீர்கள் இல்லையா வால் மீன்கள்.

ஒரு விண்மீனை ஒட்டி நீளமான ஒரு வெள்ளைக் கீற்றுப்போல இருக்குமே, அதைத்தான் வால்மீன் என்கிறோம்.

வால்மீன்கள் எல்லாம் மிக நீண்ட பாதையில் சுற்றி வருகின்றன. அவற்றின் நீள்பாதையின் மறுமுனை பல்வேறு கோள்களையும் தொட்டு வருகிறபடி அமைந்துவிடுகின்றன.

அந்த வால்மீன்கள் எப்போதும் அந்தக் கீற்றோடேயே இருப்பதில்லை. விண்மீன்களாகவே இருக்கும். அவை, கதிரவனுக்கு அருகில் வருகிற போதே அது போன்று கீற்று உண்டாகின்றது.

உறைந்த நிலையில் உள்ள பொருள் கதிரவன் வெப்பத்தால் உருகி வால் போல் நீண்டு விடுகின்றது.

அந்த வால் போன்ற கீற்று பல இலக்கம் அயிரமாத்திரி நீளமுடையதாக இருக்கும்.

அப்படியான வால்மீன் நம் நிலத்திற்கு அருகில் வருகையில் அதிலிருந்து சிதறும் பொருள் நம் காற்று வெளி மண்டலத்துள் நுழைகிறது.

அதனால் ஏற்படுகிற உராய்வினால் அச்சிதறல்கள் தீப் பற்றி எரியத் தொடங்கிவிடுகின்றன.

அவற்றைத்தாம் நாம் எரிகற்கள் என்கின்றோம்.

மேலும் அப்படியான பொருள்கள் சில எப்போதாவது நம் நிலத்தின்மீதும் விழுந்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியும் இல்லையா?

அவற்றைத்தாம் நாம் ‘‘விண்கற்கள்’’ என்கிறோம். என்றவர் ‘‘மீதியை நாளைத் தொடரலாமா?’’ என்று கேட்டவுடன் குழந்தைகள் “சரிங்க ஐயா” என்று எழுந்தன.

# எங்களுக்கும்தான் ஆசை!

செல்விக்கு அகவை ஒன்பது இருக்கும். கயிறு திரிக்கும் ஒரு சிறிய தொழிலகத்தில் பணி செய்பவள்.

படிக்க வேண்டிய இந்த அகவையில் இதுபோன்று வேலை செய்கிறாயே என்று செல்வியைப் பார்த்துக் கேள்விகள் கேட்டான் நம்பி.

நம்பி : நீ வேலைக்கு ஏன் செல்கிறாய்?

செல்வி : வீட்டில் மிகவும் தொல்லை. அப்பா இல்லை. அம்மாவால் மட்டும் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது. எனவேதான் நான் வேலைக்குச் செல்கிறேன்.

நம்பி : நீ வேலைக்குச் செல்லும் நேரம் எது?

செல்வி : காலை 9.00 மணி முதல் மாலை 6.30 மணி வரை.

நம்பி : உனக்கு வேலையில் நிறைய்த் தொல்லை உண்டா?

செல்வி : நாள் முழுவதும் நின்றுகொண்டே செய்ய வேண்டும். கால்கள் வலிக்கும். சிறிது நேரங்கூட ஓய்ந்திருக்க முடியாது. கண்காணிப்பாளர் திட்டுவார்.

நம்பி : சரி, கூலி எவ்வளவு கொடுப்பார்கள்?

செல்வி : நாள் ஒன்றுக்கு உரு. 15. பொங்கலுக்கு ஓர் இணைத் துணி தருவார்கள். வேறு எந்தச் சலுகையும் கிடையாது.

நம்பி : தொடர்ந்து இதே வேலையைத்தான் செய்ய விருப்பமா?

செல்வி : வேறு வழியில்லையே. இதைத்தானே செய்தாக வேண்டும். வயிறு ஒன்று இருக்கிறதே!

(நம்பியின் கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லிக் கொண்டிருந்த செல்வி திடுமென நம்பியிடம் சில கேள்விகளைக் கேட்டாள்.)

செல்வி : எனக்கு மட்டும் ஏன் படிக்க வாய்ப்பில்லை? ஏன் என்னைப் போன்று குழந்தைகள் வீட்டின் வறுமைய்யைப் போக்க உழைக்க வேண்டும்? எங்களின் குழந்தைப் பருவத்தை மகிழ்வாகச் செலவிட எங்களுக்கு உரிமை யில்லையா? மற்ற குழந்தைகளைப் போல விளையாட வேண்டும். எங்கள் திறமைகளை வளர்க்க வேண்டுமென்ற ஆசையில்லையா? எங்களுக்கு எதிர்காலம் இருக்குமா? எங்களைப் பற்றி யாருக்குமே அக்கறையில்லையா? நீங்களாவது எங்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடாதா?

இவ்வாறு செல்வி கேட்டதை அறிந்து ஏதும் நாம் செய்ய வேண்டும் என்கிற உறுதியில் எண்ணத் தொடங்கினான் நம்பி.


# முள்ளம் பன்றி

மிகவும் வியப்பான விலங்குகளுள் முள்ளம்பன்றியும் ஒன்று. இதன் உடல் எங்கும் கூர்மையான நீண்ட முட்கள் வளர்ந்திருக்கும்; உடலோ பன்றி போல இருக்கும். அதனால் இதற்கு முள்ளம் பன்றி அல்லது முட்பன்றி என்று பெயர்.

முள்ளம் பன்றியின் உடல் கருப்பும், பழுப்பும் கலந்த நிறமுடையது. அதன் தலையிலிருந்து கால்வரை உள்ள முடிகளே இவ்வாறு முட்களாக உள்ளன.

அதன் நடுமுதுகிலும், இடுப்பிலும் உள்ள முட்கள் மிக நீளமானவை. முள், அடியில் கருப்பாகவும் நுனியில் வெண்மையாகவும் இருக்கும் நுனி மிகக் கூர்மையானது.

முள்ளம் பன்றி மற்ற விலங் குகளுக்குத் தீங்கு செய்யாது, ஆனால் நாய், நரி போன்றவை துரத்தினால் அது ஓடாமல் நின்று கொண்டு, தன் உடல் முட்களைச் சிலிர்த்து நிமிர்த்திக் கொள்ளும். அப்போது அவற்றி லிருந்து கரகர வென்று ஓசை எழும்பும். துரத்திய விலங்கு இதைக் கண்டும் அஞ்சி அகலவில்லை என்றால், முள்ளம் பன்றி பின்னோக்கிச் சென்று அதன் மீது மோதும். அப்போது இதன் முட்கள் பகை விலங்கின் உடலின்மேல் தைத்து விடுகின்றன. அதற்கு அஞ்சிக்கொண்டு எந்த விலங்கும் அதைத் தாக்குவதில்லை.



பாம்பு இதைக் கொத்த வந்தால், பாம்பின் மீது விழுந்து, புரண்டு சுற்றிக் கொண்டு முட்களால் காயப்படுத்திவிடும்.

முள்ளம் பன்றி வளை தோண்டி அதில் வாழும். பகல் முழுவதும் வளையில் பதுங்கியிருந்து இரவில் தான் இரைதேடும்.

இது கொறிக்கும் விலங்கினத்தைச் சார்ந்தது. மரங்களின் மெல்லிய வேர்கள், பட்டைகள், கிழங்குகள் போன்றன இதன் உணவாகும்.

உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு என்றால் இதற்கு மிகவும் விருப்பமாம்!

# விளையும் பயிர்.



சோவியத்து உருசியாவில் பல ஆண்டுகளுக்கு முன்னால் ஓவியப் போட்டி ஒன்று நடைபெற்றது. சிறுவர்களும், சிறுமியர்களும் வெள்ளைத் தாளில் ஓவியங்களை வரையத் தொடங்கினர்.

“உலகத்தில் சிறந்தவை அனைத்தையும் குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் கொடுப்போம்” என்று சொன்ன அறிஞர் இலெனின் அங்கே வந்தார்.

சிறுவர் சிறுமியரையும் அவர்கள் வரைந்து கொண்டிருந்த வண்ண ஓவியங்களையும் பார்த்துக்கொண்டே மெல்ல நடந்து கொண்டிருந்தார். அப்படி நகர்ந்து கொண்டிருந்த இலெனின் திடுமென அசைவற்று நின்று விட்டார். காரணம் சிறுவன் ஒருவன் வெள்ளைத் தாளில் கருப்பு வண்ணம் தீட்டி, தாள் முழுவதையும் கருப்பாக்கிக் கொண்டிருந்தான்.

இலெனின் அச் சிறுவனை நோக்கி, “தம்பி என்ன வரைந்து கொண்டிருக்கிறாய் ?” என்று கேட்டார். அச்சிறுவன் “பலகணி வழியே தெரியும் வானத்தை வரைகிறேன்” என்றான்.

அச்சிறுவனின் தலையில் கையை வைத்து “தம்பி! நீண்டு உயர்ந்த மலைகள். அந்த மலைகளிலே உயர்ந்த மரம், அடர்ந்த செடி, கொடிகள், அழகான நீரோடைகள். மேலே பறக்கின்ற பறவைகள். இவற்றுக்கு மேலே அன்றோ அகன்ற நீல வானம் இருக்கும்!” என்று சொன்னார்.

அச்சிறுவன் இலெனின் கையைப் பிடித்துத் தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தான் இலெனினும் அச் சிறுவன் வீட்டிற்குச் சென்றார்.

சேரிப் பகுதிகளைக் கடந்து அச்சிறுவனின் வீட்டிற்குள் நுழைந்தார். அவன் வீட்டின் பலகணியைத் திறந்து காட்டினான். அச்சிறுவன் வீட்டின் அருகிலே தொழிற்சாலையின் புகைபோக்கி வழியே வந்த புகை வானத்தை மறைத்துக் கொண்டிருந்ததைக் கண்டார்.

“என் வீட்டுப் பலகணி வழியே வானம் இப்படித்தான் இருக்கிறது” என்று சொன்னான் சிறுவன்.

இலெனின் அச்சிறுவனின் ஆசிரியரை அழைத்து “வாழ்க்கையின் உண்மையைப் புரிந்து கொண்ட அச்சிறுவனைப் பயிற்றுவியுங்கள். நாளை இவனுடைய படைப்புகள் புகழப்படும்” என்றாராம்.

அச்சிறுவன்தான் பிற்காலத்தில் சோவியத்து உருசியாவின் அரசு முத்திரையை வரைந்தவராம்.

# அவற்றையெல்லாம் யார் கண்டறிவது ?

உலகம் இன்றைக்கு அறிவியலில் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது நமக்குத் தெரியும்.

ஆனால் அது எல்லாத் துறைகளிலும் சமச் சீராக வளர்ந்துவிடவில்லை.

ஒரு பக்கத்தில் வான வெளியில் சுற்றித் திரிகிற அறிவியல் வளர்ந்திருக்கிற போதும், இங்கு கழிவுச் சாக்கடைக்குள் மாந்தனே முங்கி அல்லவா வேலை செய்கிறான்.

இப்படியான ஏற்றத் தாழ்வு இருப்பது ஒரு பக்கம் என்றால், இன்னொரு பக்கம் நாம் வாழும் உலக உயிர்கள் பற்றியே இன்னும் நாம் ஏராளமாய் அறிந்திருக்க வில்லையாம்.

10 விழுக்காட்டுக்கும் குறைவான அளவிலேயே நம் கண்டு பிடிப்புகள் உள்ளனவாம்.

அண்மையில், உலகப் பாதுகாப்புக் கண்காணிப்பு நடுவம் - இந்தப் புள்ளி விளக்கத்தைத் தெரிவிக்கின்றது

| உயிரினங்கள் | அறியப்பட்டுள்ள எண்ணிக்கை | இருப்பதாக மதிப்பிட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| பூச்சிகள் | 9,50,000 | 80,00,000 |
| காளான்கள் | 70,000 | 10,00,000 |
| புழுக்கள் | 15,000 | 5,00,000 |
| நுண்ணுயிரி (பாக்டீரியா) | 4,000 | 4,00,000 |
| நிலைத்திணைகள் (தாவரங்கள்) | 2,50,000 | 3,00,000 |
| ஓரணு உயிர்கள் | 40,000 | 2,00,000 |
| நோயணுக்கள் | 5,000 | 5,00,000 |

இந்தப் பட்டியல் மிகப் பெரியது. இங்கே உள்ளது எடுத்துக் காட்டுக் குரியதுதான்.

தம்பி, தங்கைகளே . . . சிலவற்றை யெல்லாம் நாம் தாமே கண்டறிய முனைதல் வேண்டும்!

## தமிழ் அம்மாவும்;
## ஆங்கில மம்மியும்.

அம்மா என்று அழகுத் தமிழில்
அம்மா என்று சொல்லு - உன்
அம்மா தானே உன்னை வளர்த்தாள்
அம்மா என்று சொல்லு!

அம்மா சொல்லும் போது தானே
அழகுத் தமிழும் இனிக்கும் - நீ
அம்மா மறந்து மம்மி என்றால்
அமுத வாயும் புளிக்கும்!

அம்மா கொடுத்த பாலைத் தானே
அன்று குடித்து வளர்ந்தாய் - உன்
அம்மா பேசும் மொழியைத் தானே
அன்று சொல்லிக் கொடுத்தாள்!


அம்மா! அம்மா!! என்றே ஓடி
அணைத்துக் கொண்டாய் அன்று - உன்
அம்மா தானே உயிராய் உன்னை
அனுப்பி வைத்தாள் இன்று!

அம்மா என்று சொல்லும் போதே
அன்னை மொழியே கரும்பு - நாம்
அம்மா மறந்து போனா லிங்கே
அன்னை நிலமே கரம்பு!

அம்மா உயிரோ டிருக்கும் போது
அம்மா மம்மி எப்படி? - தமிழ்
அம்மா மம்மி இல்லை என்பதை
அமுதே நீயும் ஒப்படி!

அம்மா மொழியில் கற்றால் தானே
அறிவு சுரந்து வளரும் - தமிழ்
அம்மா மறந்து மம்மி என்றால்
அறிவு எப்படி வளரும்?

**- புதுவை. தமிழ்நெஞ்சன்.**



## குரங்கு

குட்டிக் குரங்கு வருகுது
சுட்டித் தனங்கள் செய்யுது.
நெட்டை வாலை நீட்டியே
நெடிய தூரம் தாவுது!


மலையில் கூடி வாழுது
மரங்கள் ஏறி இறங்குது.
கிளையை விட்டுக் கிளையிலே
குதித்துத் தாவி மகிழுது!

குரங்கு போலக் குதிப்பது
குழந்தை நமக்கு நல்லதே.
குரங்குக் குட்டி போலவே
கூடி ஆடி மகிழுவோம்!

**- வெற்றிச் செழியன்**

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்) எண்: 8119/63 தென்மொழி டிஎன். சீப் பி.எம்.சி 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி இணைப்பு.

## சொல்லடை



**இடமிருந்து வலம்**

1. பாவலரேறு ஐயாவின் நூல்களுள் ஒன்று (கடைசி எழுத்து இல்லை) (8)
7. தம்பிக்கு மூத்தவன் (3)
12. காவிரிப் பூம்பட்டினம் (5)
13. காற்று (2)
14. ஒரு சிற்றுண்டி (3)
15. பாவேந்தர் பாரதிதாசனின் நூல்களுள் ஒன்று (8)

**மேலிருந்து கீழ்**

1. வேலையைக் குறிக்கும் மற்றொரு சொல் (2)
2. காஞ்சிபுரத்திற்குப் புகழ் சேர்ப்பது. (3)
3. அறுசுவைகளுள் ஒன்று (4)
4. பட்டினி (4)
5. காவிரி (3)
7. ‘ஆப்பிள்’ பழத்தின் தமிழ்ப் பெயர். (4)
8. மொழிஞாயிறு தேவநேயனார். (4)
11. மகிழ்ச்சி (4)

**வலமிருந்து இடம்**

10. அம்பு (2)
11. கோவலன் மனைவி (4)

**கீழிருந்து மேல்**

6. கோயம்புத்தூர் (2)
7. அழகு (2)
9. ‘மம்மி’ என்னும் சொல்லின் பொருள் (3)
13. நிறம் (4)
15. மாலை நேரம் (3).



தென்மொழி, சென்னை - 600 005